பதிவு அஞ்சல்

அனுப்புநர்,
திரு.ச.அருள்ராஜ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு.

பெறுநர்,
பதிவுத்துறைத் தலைவர்,
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
சென்னை - 28.

29 AUG 2024
36463

ந.க.எண்.13211/2023/ஆ3, நாள்.16.08.2024

அய்யா / அம்மையீர்,

பொருள் வழக்கு - W.P.No.10666/2019 - செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் வட்டம் - சிட்லப்பாக்கம் கிராமம் - ஏரி ஆக்கிரமிப்பு அகற்றிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டது - மாண்புமிகு உயர்நீதிமன்றம் 08.09.2021 தேதியிட்ட ஆணையின்படி ஆக்கிரமிப்புகளை அகற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டது - சிட்லப்பாக்கம் மற்றும் சேலையூர் கிராமங்களில் - நீர்நிலை என வகைபடுத்தப்பட்ட நிலத்தில் ஆவணப்பதிவினை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது - மாவட்ட நிர்வாகத்தின் அறிக்கை அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை
1. பதிவுத்துறைத் தலைவர், பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம், சென்னை - 28 அவர்களின் கடித ந.க.எண்.35083/சி1/2021, நாள்.08.09.2023
2. வட்டாட்சியர் தாம்பரம் அறிக்கை ந.க.எண்.5018/2023/ஆ2, நாள்.02.03.2024
3. மாவட்ட வருவாய் அலுவலர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.3196/2021/ஆ3, நாள்.16.09.2021
4. பதிவுத்துறைத்தலைவர், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35083/சி1/2021, நாள்.20.09.2021
5. மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.3196/2021/ஆ3, நாள்.28.09.2021
6. சம்மந்தப்பட்ட ஆவணங்கள்.

.....

பார்வை 1-ல் காணும் கடிதத்தின் மீது தங்களின் கனிவான கவனம் ஈர்க்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், சிட்லப்பாக்கம் மற்றும் சேலையூர் கிராமங்களில் நீர்நிலையென வகைபடுத்தப்பட்ட நிலத்தில் பத்திரப்பதிவு மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது என்றும், சிட்லப்பாக்கம் கிராமம் புல எண்.256/2 பொறுத்த

Verified by RealEstate

கிராம நத்தம் பட்டா வழங்கப்பட்டும் மனைகளாக பிரிக்கப்பட்டும், இப்புலம் ஏற்கனவே வங்கிக்கு அடமானம் எழுதிக் கொடுத்து பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் பொறுத்து அடமானம் திரும்ப பெறும் ஆவணங்கள் பதிவு செய்ய இயலாத நிலை உள்ளது எனவும், கண்ணகி நகர் பொதுநலச் சங்கம் சார்பாக மனு அளிக்கப்பட்டுள்ளதால், மேற்படி சிட்லப்பாக்கம் கிராம புல எண்.256/2-ன் நிலைப்பாட்டினை அனுப்பி வைக்கக் கோரி பார்வை 1-ல் காணும் கடிதத்தில் கோரப்பட்டதை தொடர்ந்து பின்வருமாறு எனதறிக்கையை அனுப்பி வைக்கிறேன்.

மேற்படி தாம்பரம் வட்டம், சிட்லப்பாக்கம் கிராம கணக்குகளை பரிசீலனை செய்ததில் புல எண்.256 ஆனது நில உடமை மேம்பாட்டுத்திட்ட (UDR) 'அ' பதிவேட்டின்படி பின்வருமாறு தாக்கலாகியுள்ளது.

புல எண்	வகைபாடு	பரப்பு (ஹெ.ற.ஏர்ஸ்)	குறிப்பு
256/1	அரசு புறம்போக்கு	33.95.0	ஏரி
256/2	அரசு புறம்போக்கு	1.60.0	கிராம நத்தம்
256/3	அரசு புறம்போக்கு	4.45.0	கிராம நத்தம்
256/4	அரசு புறம்போக்கு	1.08.0	சென்ட்ரல் வேர்உறவுசிங் கார்ப்பரேஷன்
மொத்தம்		41.08.0	

மேற்படி பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், நெ.15.சேலையூர் கிராமம், புல எண்.74/1-ல் தாங்கல் வகைபாடு கொண்ட அரசு புறம்போக்கு நிலத்தில் பல்வேறு விற்பனைகள் நடைபெற்றுள்ளது என்பது வில்லங்கச் சான்று வழியாக தெரிவருகிறது எனவும், மேற்படி புல எண்ணிற்கு வழிகாட்டி மதிப்பு உள்ளது என பதிவுத்தறை இணைய தளமான (tnreginet) மூலம் தெரியவருவதால், புல எண்.74/1-க்கு வழிகாட்டி மதிப்பினை 0 (பூஜ்யம்) என பதிவு செய்து அறிக்கை அனுப்பி வைக்கக்கோரி மாவட்ட பதிவாளர் (உ.ப.து நிலை), தென் சென்னை (1) மற்றும் சார் பதிவாளர், சேலையூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பார்வை 5-ல் காணும் கடிதத்தில் தாம்பரம் வட்டம், சிட்லப்பாக்கம் கிராமம், புல எண்.256/1-ல் அடங்கிய பெரியார் தெரு, அரவிந்தர் தெரு, அன்னை சத்யா தெரு, விநாயகர் கோவில் தெரு, பாரதிதாசன் தெரு,

Verified e-RegiEstore

சுர்ஜா தெரு, சுபாஷ்சந்திரபோஸ் தெரு, அழகர் தெரு, சிவசங்கரன் தெரு, இளங்கோ தெரு, வீராமாழுனிவர் தெரு, உஜால் சிங் தெரு, பாண்டியன் தெரு, மணிமேகலை தெரு, காமராஜர் தெரு, அவ்வையார் தெரு மற்றும் சத்யா தெரு மற்றும் தாம்பரம் வட்டம், சேலையூர் கிராமம், புல எண்.74/1-ல் (Town Survey No, Block 44 Ward G, T.S.No.119) கருணாநிதி தெரு(பகுதி), பெரியார் தெரு(பகுதி), கண்ணப்பர் தெரு(பகுதி) மற்றும் தாங்கல் கரை(பகுதி) ஆகிய பகுதிகளில் எந்த பரிவர்த்தனைகளும் நடைபெறாமல் இருக்க, தெருக்களின் வழிக்காட்டி மதிப்பினை பூஜ்யம் மதிப்பாக மாற்றப்பட வேண்டும் என பதிவுத்துறைத்தலைவர், சாந்தோம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை 4-ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் கடிதத்தின்படி தாம்பரம் வட்டம், சேலையூர் கிராமம் ஏரி வகைபாடு கொண்ட புல எண்.74/1, சிட்லப்பாக்கம் கிராமம் ஏரி புல எண்கள்.256/1 ஆகிய அரசு புறம்போக்கு புலங்கள் மற்றும் சிட்லப்பாக்கம் கிராமம் கிராம நத்தம் புல எண்களான 256/2 மற்றும் 256/3 ஆகியவற்றையும் சேர்த்து பதிவுத்துறை இணைய தளமான (tnreginet) வழிகாட்டி மதிப்பினை 0 (பூஜ்யம்) என பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார் பதிவாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது தெரியவருகிறது.

எனவே, மேற்படி சிட்லப்பாக்கம் கிராமம் புல எண்.256/1 அரசு புறம்போக்கு **"ஏரி"** வகைபாடு எனவும், புல எண்.256/2 மற்றும் 256/3 ஆகிய **"கிராம நத்தம்"** வகைபாட்டில் பட்டா வழங்கப்பட்டுள்ளதும் தெரியவருவதால் புல எண்.256/2 மற்றும் 256/3 ஆகியவை குறித்து 'தடை செய்ய இவ்வலுவலகம் வாயிலாக எவ்வித தகவலும் தெரிவிக்கப்படாத நிலையில், புல எண்.256/2 மற்றும் 256/3-க்கு பதிவுத்துறை இணையதளத்தில் வழக்கமான நடைமுறை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-ச.அருண்ராஜ்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு.

//உத்தரவின்படி//

மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்)

Verified © RealEstate

/பதிவுத்துறை/

அழலுப்புநர்
பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்
சார்பதிவாளர்,
சேலையூர், தாம்பரம்
(இணைப்புடன்)
(மா.ப தாம்பரம் வழியாக)

ந.க.எண். 35083/சி1/2021, நாள்.03.09.2024.

ஐயா/அம்மையீர்,

பொருள்:	சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, W.P.No.10666/2019 – சிட்லப்பாக்கம் ஏரி ஆக்கிரமிப்பு அகற்றிட வழக்கு தாக்கல் செய்யப்பட்டது மாண்புமிகு உயர்நீதிமன்ற 08.09.2021 தேதியிட்ட ஆணையின்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட ஆணை பிறப்பிக்கப்பட்டது – சிட்லபாக்கம் மற்றும் சேலையூர் கிராமங்களில் – நீர்நிலை என வகைப்படுத்தப்பட்ட நிலத்தில் ஆவணப் பதிவினை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது – தொடர்பாக.
பார்வை:	1. சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேரணை எண். W.P.No.10666/2019, ஆணை நாள்.08.09.2021. 2. பதிவுத்துறை தலைவர் கடித எண்.35083/சி1/2021- 1, நாள்.20.09.2021. 3. மாவட்ட வருவாய் அலுவலர், செங்கல்பட்டு கடித எண். 3/9 ஆ2/21 நாள்.28.09.2021. 4. வருவாய் கோட்டாட்சியர் தாம்பரம் கடித எண். 2425/அ/2020 நாள்.27.09.2021. 5. கண்ணகி நகர் பொது நல சங்கம் சார்பாக மனு தேதி 16.08.2023. 6. பதிவுத்துறை தலைவர் கடித எண்.35083/சி1/2021, நாள்.08.09.2023 7. மாவட்ட ஆட்சியர் செங்கல்பட்டு கடித எண்.13211/2023/ஆ3, நாள்.16.08.2024

*****

பார்வை 7-ல் கண்டுள்ள மாவட்ட ஆட்சியரின் கடித நகல் இணைத்தனுப்பிவைக்கப்படுகிறது.

Verified by RealEstate™

இப்பரிவுகளுக்கு தொடர்பாக கணினி மற்றும் உரிய பதிவேடுகளில்/பதிவுருக்களில் உரிய குறிப்பினை மேற்கொள்ளவும் தெரிவிக்கலாகிறது.

/ஆணையின்படி/

16/5/2024

கண்காணிப்பாளர்

16/5/2024

நகல்

1. கணினி பிரிவு,
பதிவுத்துறை தலைவர் அலுவலகம்.
(பதிவுத்துறை இணையதளத்தில் உரிய உள்ளீடுகள்/நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)

2. மாவட்டப் பதிவாளர்,
தாம்பரம்.
(தகவலுக்காகவும் மற்றும் கண்காணிப்பின் பொருட்டும்)

Verified RealEstate